


Signature Not Verified

# நகர் ஊரமைப்பு துறை - மாமல்லபுரம் உள்ளூர் திட்ட குழுமம்
## தையூர் ஊராட்சி

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், தையூர் - ஆ கிராமம், சர்வே எண்கள்:1009/12A, 12B, 12C, 12D, 12E, 12F, 13A, 13B, 13C, 14, 17A, 17B, 1010/1, 2, 3, 1011/1, 2, 3, 1439/2C, 2D, 3A1 & 1439/3B -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்பம் எண்: HR4H6TCQ/2025
அளவுத்திட்டம் - 1 : 600

வ

**குறிப்புகள்:**

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 25537.00சமீ |
| மனைப்பிரிவு உத்தேச சாலையின் பரப்பளவு மற்றும் மூலை முடக்கு உட்பட | 6679.11ச.மீ |
| மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 18857.89ச.மீ |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | |
| நிலையிலுள்ள சாலை | |
| மனைப்பிரிவு உத்தேச சாலை | |
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | 113 எண்ணம் |

**ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை**

சாதாரண வகை மனைகள்:

| | |
|---|---|
| மனை எண்கள்: 01-70,73-74,80-81,89-90,100,107-110) | 81 எண்ணம் |
| EWS மனைகள்: (71-72,75-79,82-88,91-99,101-106) | 29 எண்ணம் (2021.00ச.மீ - 10.71%) |
| மனுதாரர் உபயோகம்: (01- 02) | 02 எண்ணம் |
| மொத்த மனைகள் | 112 எண்ணம் |

**பொது ஒதுக்கீடு: (தானமாக ஆவண எண்.2801/2025, நாள்.29.10.2025-ல்,ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது)**

| | | |
|---|---|---|
| 1) உத்தேச சாலை | 6679.11ச.மீ | |
| 2) பூங்கா -1 | 1156.12ச.மீ | |
| பூங்கா -2 | 730.56ச.மீ | |
| மொத்த பூங்கா பரப்பு | 1886.68ச.மீ (10.15%) | |
| 3) உள்ளாட்சி உபயோகத்திற்கு A.(Localbody) | 96.48ச.மீ (0.51%) | |
| 4) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழக உபயோகத்திற்கு B.(TANGEDCO) | 94.85ச.மீ (0.50%) | |

**மூலை முடக்கு**

12.0மீ வரை உள்ள அகலச்சாலைகளுக்கு 1.50மீ X 1.50மீ விடப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடம் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. அரசாணை எண்.18 (ம) அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019-ன்படி பூங்கா, சாலை ஒதுக்கீடுகள் (ம) பொது உபயோக பகுதியினை உள்ளாட்சியே தானமாக பெற்றுக்கொண்டு பராமரிக்க வேண்டும் என்றும், நில உரிமம் குறித்து உள்ளாட்சியே முழுப்பொறுப்பு என்றும் தெரிவிக்கப்படுகிறது.

3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரீசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனை உட்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

4. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவிற்கு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.

5. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் **6'0" x 4'0"**என்ற அளவுக்கு குறையாமல் காங்கீரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

6. இம்மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்று சுவர் எழுப்புதல் கூடாது.

7. இம் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் அரசாணை எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை நாள்: 09.12.2020 Para 4(iV) - ல் தெரிவித்த கீழ்கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்
The local body would grant final approval / License to the layout and would release the final layout drawings to the applicant only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the local body. Further, the local body should intimate the fact of release of final layout drawing and the details of the amenities provided for the layout to the planning authority.

8. (EWS)பொருளாதாரத்தில் பின தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றியமைக்கவோ கூடாது.ஆனால் கிராம புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் (EWS) மனைகள்விற்க இயலாத நிலையில் இருப்பின் அரசானை எண்:16நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:30.01.2020-ன் படி EWSமனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்படல் வேண்டும்.

**சிறப்பு நிபந்தனைகள்:-**

நகர் ஊரமைப்புத்துறை சட்ட பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று சரிப்பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

குறிப்பு :
அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ம.வ/மா.உ.தி.கு.(செ.மா.5)எண்:289/2025**

உறுப்பினர் செயலர்
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்
செங்கல்பட்டு மாவட்டம்